முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.
நாள். 17.03.2026.

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**

**அசல் வழக்கு எண். 86/2024**

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 17ம் நாள் செவ்வாய்க்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சாட்சியம் உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜீலாதேவி | மாவட்டம் | : | சென்னை |
| க/பெ | : | கருணாகரன் | வயது | : | 45 |
| ஊர் | : | மாங்காடு | தொழில் | : | இல்லத்தரசி |

**பி.வா.சா. 1 (ஜீலாதேவி) : வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்ட 30.06.1996 தேதியிட்ட ஆவணத்தின்படி வாதி லோகநாதனுக்கு சொத்து ஜக்பந்தியில் 12 செண்ட் வாதிக்குரியது என்று குறிப்பிட்டுதான் கிரயம் கொடுக்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்ட ஆவணத்தின்படி சர்வே எண் 152/5ஏ ஆனது வேலாயுதம் மற்றும் லோகநாதன் பெயரில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணமானது கிஷ்ட கவுண்டரும் அப்பாதுரையும் கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்பதற்கான ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தில் நாங்கள் நிறுத்திக்கொண்ட நிலத்திற்கு 12 செண்ட் என்பதனை ஜக்பந்தியில் குறிப்பிட்டு கிரயம் செய்திருப்பார்கள். அவ்வாறு எதுவும் குறிப்பிடாததால் வாதிக்கு உரிமையானது என்று சொன்னால் சரியல்ல.

**2.** பிரேமா என்பவர் வாதியின் இயலாமையை பயன்படுத்தி பட்டா எண் 267 என்ற சொத்தினை தப்பாக எனக்கு கிரயம் கொடுத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. 05.06.2000 அன்று வாதிக்கு வேலாயுதம் மற்றும் பிரேமா ஆகியோர் கிரயம் கொடுத்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி பிரேமாவை வழக்கில் விசாரித்தால்தான் உண்மை தெரிய வரும் என்று சொன்னால் எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணமானது நான் கிரயம் பெற்ற ஆவணம் என்றால் சரிதான். மேற்ப டி பி.வா.சா.ஆ.9 ஆவணத்தில் சொத்து விவரத்தில் ஜக்பந்தி என்ன குறிப்பிட்டுள்ளது என்றால் ஜக்பந்தி எதுவும் குறிப்பிடப்படவில்லை. பிரேமா என்பவர் எனக்கு கிரயம் செய்தபோது எந்த ஒரு ஜக்பந்தியும் இல்லாமல் இல்லாத சொத்தினை எனக்கு விற்பனை செய்தார் ஆனால் மேற்படி பிரேமா ஜக்பந்தியை குறிப்பிட்டு வாதிக்கு விற்பனை செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

3. வழக்கு சொத்து 152/2சி, 152/5ஏ, 152/5பி ஆதியில் எனது முப்பாட்டனார் ரத்தின கவுண்டரால் சுயமாக சம்பாதித்த சொத்து என்று சொன்னால் எனக்கு தெரியாது. ரத்தினகவுண்கடருக்கு 3 வாரிசுகள் கிஷட்டப்பன், அப்பாதுரை, நடேசன் ஆகிய மூவர் என்றால் சரிதான். மேற்படி ரத்தின கவுண்டர் காலாந்திரத்திற்கு பிறகு மேற்படி மூவரும் வாச்சா பாகப்பிரிவினை செய்துகொண்டார்கள். அப்பாதுரை மற்றும் கிஷ்டப்பன்ஆகியோர் சர்வே எண் 152/5ஏ சொத்தினை கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்பதற்கான ஆவணம்தான் வா.சா.ஆ.1 என்றால் சரியல்ல. மேற்படி வேலாயுதமும் தனது மகள் பிரேமாவும்

தங்களின் பாகத்தை வாதியான லோகநாதனுக்கு அவர் சொத்துக்கள் போக மீதமுள்ள சொத்துக்களை விற்பனை செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணத்தில் சாட்சியாக கையொப்பம் இட்ட கிரயம் செய்த பிரேமாவின் மகள்கள்தான் என்று சொன்னால் சரிதான்.

4. பொதுவாக கிரயம் செய்யும்போது ஊரில் இருக்கும் 3ம் நபரைதான் சாட்சிக்கு கையொப்பமாக கூப்பிடுவார்கள். ஆனால் எனக்கு இல்லாத சொத்தினை போலியாக எனக்கு பிரேமா விற்பனை செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் ஆவணங்களை பரிசீலித்தபிறகுதான் கிரயம் பெற்றேன். வழக்கு சொத்து சம்மந்தமாக வாதி லோகநாதனுக்கும் வேலாயுதத்துக்கும் பஞ்சாயத்தார் ராஜேந்திரன் முன்னிலையில் பேசப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் பொய் சொல்கிறேன் என்றும் நானும் என் கணவரும் வாதியும் ராஜேந்திரன் முன்னிலையில் பேசினோம் என்று சொன்னால் சரியல்ல. தற்போது நான் என் தந்தை, அண்ணன் மீதும் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன்என்றால் சரிதான். தற்போது எங்களுக்குள் பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான். நான் பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு இந்த வழக்கு தாக்கல் செய்ததற்கு முன்னரா அல்லது பின்னரா என்றால் எனக்கு தெரியாது.

5. 1ம் பிரதிவாதி பிரேமா தனக்கு உரிமையில்லாத சொத்தில் போலியான பட்டாவை பெற்று எனக்கு விற்பனை செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. நான் சரியாகத்தான் கிரயம் பெற்றேன். 1ம் பிரதிவாதி பிரேமா, அவரது கணவர், வேலாயுதம் ஆகியோர் 1996க்கு பிறகு தங்களின் சொந்த ஊரை விட்டு சென்றுவிட்டார்கள். மேற்படி சொத்தில் பிரேமாவிற்கு உரிமையில்லை எனத் தெரிந்துகொண்டே எனக்கு விற்பனை செய்துள்ளது தவறு எ ன்று சொன்னால் சரியல்ல. அதனால் இந்த வழக்கானது தாவாப்படி அனுமதிக்கப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**இத்துடன் குறுக்கு விசாரணை முடிவடைகிறது**

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

K NALEENI

Digitally signed by K NALEENI
Date: 2026.03.17 18:33:39 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

செய்யாறு